செ.வெ.எண்:31 நாள்:13.04.2017

# பத்திரிக்கைச்செய்தி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கரூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் கரூர் மற்றும் குளித்தலை வட்டாரங்களிலுள்ள வாங்கல் குப்பிச்சிபாளையம், கோம்புபாளையம் மற்றும் இராஜேந்திரம் களப்பகுதிகளில் காலியாக உள்ள 3 களப்பகுதி பணியாளர்கள் (கரூர் – 2, குளித்தலை –1) பணிக்கு எழுத்து தேர்வு எதிர்வரும் 26.04.2017 அன்று கரூர் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறவுள்ளது. எழுத்து தேர்வில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பின்னர் நேர்முக தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவர். களப்பகுதி வழிநடத்துனர் பணிக்கு தேர்வில் கலந்து கொள்ள பின்வரும் தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். தகுதியுள்ள நபர்கள் சம்மந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பரிந்துரையினை பெற்று 21.04.2017 மாலை 5.00 மணிக்குள் திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு , அறை எண். 212 , மாவட்ட ஆட்சியரகம், கரூர் என்ற முகவரியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## தகுதிகள்

| | |
|---|---|
| 1 | குறைந்த பட்சம் +2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இளங்கலை பட்டம் மற்றும் அடிப்படை கணிணி அறிவு பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 2 | சுய உதவிக் குழு உறுப்பினராக இருக்க வேண்டும். |
| 3 | 21 – 45 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். |
| 4 | சுய உதவிக் குழு நிர்வாகியாக இருந்திருக்கவேண்டும். |
| 5 | களப்பகுதிக்குட்பட்ட ஊராட்சிகளுக்கு பயணம் செய்ய விருப்பம் உள்ளவராக இருக்க வேண்டும். |
| 6 | சொந்தமாக ஒரு கைபேசி (Mobile Phone) வைத்திருக்க வேண்டும். குறுஞ்செய்தி ( SMS) அனுப்ப தெரிந்திருக்கவேண்டும். |
| 7 | இருசக்கர வாகன ஓட்டுனர் உரிமம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 8 | களப்பகுதி வழிநடத்துனர் பணி முற்றிலும் தற்காலிகமானது . எனவே தற்காலிகமாக பணிபுரிய விருப்பம் உள்ளவராக இருத்தல் வேண்டும். |
| 9 | வேலையின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படும். |

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.